<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் சித்திரை மாதம் **16** ம் தேதி ஆங்கில ஆண்டு **29.04.2022** ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை **03.00** மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரண கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைப்பெற்றது.

**நாள் : 29.04.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

## <u>மன்றப்பொருள்</u>

**1.** நகராட்சி ஆணையாளரின் ஏப்ரல்–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் 28 நாள் 29.04.2022**
**பதிவு செய்யப்பட்டது**

**2.** மேட்டூர் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் 2021–2022 கீழ் மேற்கொள்ள உள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நகர்ப்புற சுகாதார நல மையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய இந்நகராட்சி கடிதம் ந.க.எண்.3278/2021/இ1 நாள்.21.12.2021 மூலம் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், சேலம் அவர்களை கோரியதற்கிணங்க Salem Malai Murasu என்ற நிறுவனத்தின் மூலம் மாலை முரசு நாளிதழில் 22.12.2021 அன்று ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி Salem Malai Murasu நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.9450/–க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக்கட்டணம் ரூ.9450/–க்கும், ரூ.9450/–ஐ Salem Malai Murasu நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3278/2021/இ1)**

**தீர்மான எண் 29 நாள் 29.04.2022**

**அனுமதிக்கப்பட்டது**

3. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1ல் கீழ்குள்ளவீரன்பட்டியில் செயல்படும் காவலர் பயிற்சி பள்ளியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் பாலமலையிலிருந்து வரும் மழைநீர் ஆகியவை குள்ளவீரன்பட்டி பிரதான சாலையில் உள்ள சிறுபாலத்தின் வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. பயிற்சி காலம் மற்றும் மழைகாலங்களில் வெளியேறும் அதிகப்படியான நீரானது முறையான கால்வாய் வசதி இல்லாததால் அப்பகுதியில் உள்ள தெருக்கள் மற்றும் வீடுகளுக்கு செல்வதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் மேலும் அப்பகுதியில் புதிய கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்து தரக் கோரியுள்ளதால் மேற்படி பகுதியில் வாய்க்காலுடன் கூடிய சிறுபாலம் அமைக்க ரூ.22.00 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே கீழ்குள்ளவீரன்பட்டி பகுதியில் வாய்க்காலுடன் கூடிய சிறுபாலத்தினை உத்தேச செலவின தொகை ரூ.22.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1988/2022/இ1)**
**தீர்மான எண் 30 நாள் 29.04.2022**
**அனுமதிக்கப்பட்டது**

4. மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.11337/2016/உதே1 நாள்.07.01.2022ன் படி நகர்புற உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்திய மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களை BHEL பொறியாளர்களை கொண்டு முதல் நிலை சரிபார்க்கும் பணி 20.01.2021 முதல் 10.01.2021 வரை சுத்தம் செய்து புதிய பார்கோடு மற்றும் இதர வேலைகள் மேற்கொண்டதற்கு தொகை ரூ.3,61,501/– செலவினம் செய்யப்பட்டதாகவும் அதற்கான தொகையினை சேலம் மாவட்டத்திலுள்ள 31 பேரூராட்சிகள் மற்றும் 6 நகராட்சிகள் பிரித்து தொகை ரூ.9970/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்த தொகை ரூ.9970/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்
**(ந.க.எண்.1418/2022/சி1)**
**தீர்மான எண் 31 நாள் 29.04.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**5**. இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு 13.04.2022 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.S.அகிலா/சத்யா என்பவர் வைப்புத்தொகை எதுவும் செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு குத்தகை)** |
|---|---|---|
| 1. | திருமதி.A.சாந்தி / அன்பு<br>E59, கூலி லைன்,<br>மேட்டூர் அணை. | ரூ.2,75,038/- |
| 2. | திருமதி.S.அகிலா / சத்யா<br>E33, கூலி லைன்,<br>மேட்டூர் அணை. | ரூ.2,74,000/- |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.A.சாந்தி / அன்பு, மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.2,75,038/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.4,74,075/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.4,51,858/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.1,99,037/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.1,76,820/- குறைவாகவும் உள்ளது. எனவே மேற்படி உரிம இனத்திற்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**
**தீர்மான எண் 32 நாள் 29.04.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**6.** இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.15, நான்கு ரோடு பாலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள குளியலறையுடன் கூடிய கட்டணம் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு 13.04.2022 ல் மறு

பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு குத்தகை) |
|---|---|---|
| 1. | திருமதி.அமுதா<br>க/பெ.பெரியசாமி,<br>15/23B, தூக்கணாம்பட்டி,<br>மேட்டூர் அணை. | ரூ.32,400/- |
| 2. | திருமதி.சகுந்தலா<br>க/பெ.தத்துவஞானம்,<br>தூக்கணாம்பட்டி,<br>மேட்டூர் அணை. | ரூ.28,680/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.அமுதா, மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.32,400/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.28,665/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.27,322/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.3,735/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.5,078/- கூடுதலாகவும் உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண் 33 நாள் 29.04.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**7.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மாதையன்குட்டை ஐ.டி.ஐ அருகில் உள்ள வார்டு–பி, பிளாக்–15, நகரபுலஎண்.8, 1 ஹெக்டேர்4488.0 ச.மீ பரப்பளவுள்ள புன்செய் நிலத்தினை விவசாயத்திற்கு பயன்டுத்திக் கொள்ளும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு 13.04.2022 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு குத்தகை) |
|---|---|---|
| 1. | திரு.செல்லமுத்து / மன்னாதன்<br>காவேரி நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.81,000/- |
| 2. | திருமதி.ப.கிருஷ்ணவேணி,<br>D12/75, எலிக்கரடு, | ரூ.51,500/- |

| | | |
|---|---|---|
| | மாதையன்குட்டை,<br>மேட்டூர் அணை. | |
| 3. | திரு.எம்.குழந்தைராஜ்<br>த/பெ.மா.மதலைமுத்து,<br>49/54, காவேரிநகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.49,600/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.செல்லமுத்து / மன்னாதன், மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.81,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.27,563/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.26,271/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.53,437/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.54,729/- கூடுதலாகவும் உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**
**தீர்மான எண் 34 நாள் 29.04.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**8.** இந்நகராட்சிக்குச் சொந்தமான சேலம் கேம்ப் ஞாயிறு தோறு கூடும் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு 13.04.2022 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு குத்தகை) |
|---|---|---|
| 1. | திரு.Kபூபதி<br>த/பெ.குப்புசாமி,<br>36/150A21,கிரீன்பார்க்,<br>தங்கமாபுரிபட்டினம்,<br>மேட்டூர் அணை. | ரூ.60,000/- |
| 2. | திரு.Kசுப்ரமணி<br>த/பெ.கந்தசாமி,<br>71/73A, மைக்கோபாம் வீதி,<br>தங்கமாபுரிபட்டினம்,<br>மேட்டூர் அணை. | ரூ.58,000/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.K.பூபதி, மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.60,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.1,53,300/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.1,49,900/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.93,300/- குறைவாகவும், சராசரியை விட ரூ.89,900/- குறைவாகவும் உள்ளது. எனவே மேற்படி உரிம இனத்திற்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**
**தீர்மான எண் 35 நாள் 29.04.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**9.** இந்நகராட்சி எல்லைக்குள்ள வாரச்சந்தைகள், தினசரி மார்க்கெட், ஸ்டேட் பாங்க் கார்னர் முதல் காமராஜ் சிலை வரை ( சின்னபார்க், சதுரங்காடி பகுதி மற்றும் தங்கமாபுரிபட்டிணம் வளைவு பகுதிகள் தவிர) சாலை ஓரங்களில் தற்காலிகக் கடை வைப்பவர்களிடமும், தெருவில் வாகனங்கள் மூலம் வியாபாரம் செய்பவர்களிடமும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு 13.04.2022 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு குத்தகை) |
|---|---|---|
| 1. | திருமதி.S.கோகிலா<br>க/பெ.சரவணன்,<br>2/15A, பொன்னகர், மேட்டூர் அணை. | ரூ.5,29,000/- |
| 2. | திரு.R.பிரவீன்குமார்<br>த/பெ.ரவி,<br>31A24,மட்டசாலை, தூக்கணாம்பட்டி,<br>மேட்டூர் அணை. | ரூ.4,51,999/- |
| 3. | திரு.M.சக்தி<br>த/பெ.மோகன்ராஜ்,<br>C17, தூக்கணாம்பட்டி, மேட்டூர் அணை. | ரூ.4,30,210/- |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி உரிம இனத்திற்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி. S.கோகிலா, மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.5,29,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.4,05,500/-ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.3,86,497/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.1,23,500/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.1,42,503/- கூடுதலாகவும் உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1528/2022/அ2)**
**தீர்மான எண் 36 நாள் 29.04.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**10.** மேட்டூர் நகராட்சியில் 15–வது மத்திய மானியக்குழு நிதியின் கீழ் வார்டு எண்–10ல் மாதையன்குட்டை பகுதியில் புதிதாக தரைமட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி நாளிதளிழ் விளம்பரம் செய்ய இந்நகராட்சி கடிதம் ந.க.எண்.3858/2020/இ1 நாள்.20.04.2022 மூலம் செய்தி, மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், சேலம் அவர்கள் கோரியதற்கிணங்க Express Publications (Madurai) Private Limited என்ற நிறுவனத்தின் மூலம் தினமணி நாளிதழில் 31.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்படி Express Publications (Madurai) Private Limited தருமபுரி நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.6,678/–க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, 6,678/. ஐ Express Publications (Madurai) Private Limited தருமபுரி, நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.591/2022/இ1)**
**தீர்மான எண் 37 நாள் 29.04.2022**
**அனுமதிக்கப்பட்டது**

**11.** மேட்டூர் நகராட்சி வார்டு எண்.20 காவேரி நகர் காளியம்மன் கோவில் பின்புறத்தில் உள்ள சிறுபாலம் பயன்படுத்த முடியாமல் முழுவதுமாக பழுதடைந்து அப்பாலத்தின் வழியாக இருசக்கர வாகனங்கள் ஏதும் செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே பழுதடைந்ததை சிறுபாலத்தை பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக புதுப்பிக்க வேண்டி உள்ளதால் அதற்காக ரூ.90,000/– ல் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே உத்தேச செலவினம் ரூ,90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2056/2022/இ1)**

**தீர்மான எண் 38 நாள் 29.04.2022**

அனுமதிக்கப்பட்டது